பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(04.10.2022 முதல் 08.10.2022 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

---

அறிக்கை எண்: 079 (10) PJN/GKMS/2022 தேதி:03.10.2022

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (28.09.2022 முதல் 02.10.2022 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -08.10.2022 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **28/09** | **29/09** | **30/09** | **01/10** | **02/10** | | நாள்-1 04/10 | நாள்-2 05/10 | நாள்-3 06/10 | நாள்-4 07/10 | நாள்-5 08/10 |
| 78.50 | 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 0 | 0 | 4 | 8 | 12 |
| 34 | 36 | 35 | 32 | 36 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 34 | 34 | 35 | 34 | 33 |
| 25 | 25 | 26 | 26 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 26 | 27 | 26 | 25 | 24 |
| 5 | 2 | 4 | 4 | 3 | மேக மூட்டம் | 6 | 6 | 8 | 8 | 8 |
| 68-97 | 59-87 | 70-80 | 69-80 | 59-80 | ஈரப்பதம் (%) | 30-70 | 30-70 | 40-70 | 40-80 | 40-80 |
| 4 | 4 | 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ) | 10 | 8 | 12 | 12 | 8 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றின் திசை | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு | வட கிழக்கு |

## எதிர்பார்க்கப்படும் வானிலை (04.10.2022 முதல் 08.10.2022 வரை):

- அக்டோபர் 06 லிருந்து 08 வரை லேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- அக்டோபர் 04 மற்றும் 05 தேதிகளில் இடியுடன் மின்னல் ஓரிரு இடங்களில் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

- அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 24-35 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 30-80 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் மணிக்கு 08-12 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் மேற்கு வட மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.
- அக்டோபர் 05 லிருந்து 11 வரை மழை (7.39 மி.மீ) இயல்பிற்கு அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை (31.30 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (23.09 டி.செ) இயல்பாக இருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுறை

| பயிர்கள்/ கால்நடைகள் | நிலைகள் / விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| நெல் | களை மேலாண்மை | **நேரடி சேற்று விதைப்பு** நெல்லில், களை மேலாண்மைக்கு ஹெக்டருக்கு பைரசோஸல்ப்யூரான் ஈதைல் (pyrazosullfuron ethyl) 200 கிராம் என்ற அளவில் விதை விதைத்து 3-5 நாட்களில் தெளிக்க வேண்டும். |
| | | **நேரடி புழுதி விதைப்பு** நெல்லில், களை மேலாண்மைக்கு ஹெக்டருக்கு பெண்டிமிதலின் (pendimethalin) 3.3 லிட்டர் என்ற அளவில் விதை விதைத்து 3 நாட்களில் தெளிக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து பிஸ்பிரிபாக் சோடியம் (Bispyripac sodium) 200 கிராம் விதைத்த 20 நாட்களில் பயன்படுத்தவும். அதன் பிறகு கைக்களை 40 நாட்களில் மேற்கொண்டு களைகளைக் கட்டுப்படுத்தலாம். |
| கால்நடை | ஊட்டமேற்றிய வைக்கோல் | மழைக்காலங்களில் கால்நடைகளுக்கு வைக்கோலை யூரியா சத்தூட்டப்பட்டதாக மாற்றி வைத்து குளிர்காலம் முடியும் வரையும் தீவனமாக பயன்படுத்தலாம். (இதற்கு 100 கிலோ வைக்கோலை பாலித்தீன் சாக்குகளில் மேல் பரப்பி பின் 4 கிலோ யூரியாவை 65 லிட்டர் தண்ணீரில் கலந்து வைக்கோலின் மீது தெளிக்க வேண்டும். பின் காற்று புகாமல் அடைத்து 21 நாட்கள் கழித்து எடுத்து தீவனமாக பயன்படுத்தலாம்.) |
| | தடுப்பூசி செலுத்துதல் | கால்நடைகளைத் தாக்கும் கோமாரி நோய் மற்றும் தொண்டை அடைப்பான் நோய்களுக்கு மழைக்காலம் தொடங்கும் முன்னர் தடுப்பூசிகளைப் போட வேண்டும். |
| | குடற்புழு நீக்கம் | குளம், குட்டைகளில் தண்ணீர் குடிக்கும் மாடுகளுக்கும் அவற்றைச் சுற்றி மேயும் மாடுகளுக்கும் தட்டைப் புழுவிற்கான குடற்புழு நீக்க மருந்தினைப் கொடுக்க வேண்டும். |

**குறுஞ்செய்தி:** அடுத்த சில தினங்களில் லேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

**முதல்வர்**